# தந்தையர் நிலம்

சந்துஸ்

ஒரு நுளம்புக்கு
எலிக்கு எறும்புக்கு
விசர் நாய்க்கு
நலமடித்த மாட்டுக்கு
மின் கம்பக் கம்பிகளுக்கிடையில் வெளவாலுக்கு

இருப்பதை விடவும்
முட்டுப்படக் கிட்டவாய்
என் சனங்களுக்கு மிக அருகில்
மரணம் அமர்ந்திருக்கு.

புள்ளி விபரங்களைத் தூக்கிக் குப்பையிற் போடு!

சீவித்திருப்பதற்கு முன் நிபந்தனை
சாப்பாடா? தண்ணியா?
மருந்தா?அடையாளஅட்டையா?
மண்ணெண்ணையா?மண்ணாங்கட்டியா?

அதுக்கு முதல்

ஆயுதம் ஏந்தியோர் ஏந்தாதார்
இடையிலுள்ள பிரதான வித்தியாசத்தின்
நீளமென்ன?
அகலமென்ன?

முதலில் அதைக் கண்டு பிடி.

யார் சீவிக்கலாம்
யார் சாகலாம்
என்பதன் அடிப்படை
தற்சமயம் அதுக்குள்ள தானிருக்கு.

இலங்கைத் தீவின் மேலே கிடக்கும்
வானத்தின் கீழும்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பூரண அதிகாரம் அமுலிலிருக்கும்
நிலப் பரப்பெங்கிலும்
சுடப்படக் கடத்தப்பட
கைது செய்யப்பட வன்புணரப்பட
குண்டு வீசப்பட
பட்டினியாற் சாக மருந்தில்லாமற் சாக
தமிழர் என்ற தகுதி மட்டும் போதுமானது.

தனித் தமிழில் அதிகாரம் நடக்கும்
தமிழீழ தேசிய அடையாள அட்டை அமுலில் இருக்கும்
காற்று நுழையா இடத்திலும் De Facto ஆட்சி நடக்கும்
முத்திரை சேர்ப்போர் சங்கத் தலைவரும்
கண்காணிப்பின் பின்பே
இயங்க அனுமதிக்கப்படும்
தமிழீழ நிலப்பரப்பில்

நகர பிதா ஆவதற்கும் உபவேந்தர் ஆவதற்கும்
பாடசாலை அதிபராய் கனகாலம் (உயிருடன்) இருக்கவும்
தமிழர் என்ற தகுதி மட்டும் போதாது.
(எந்த அடையாள அட்டை கொண்டு நிரூபித்தாலும்)

மாடேறி மிதியாத மகிழம் பூப்புட்டியிலே
மண்ணேறி மடிகுடித்தாலும்

அந்த மண் முட்டியை ஏறிக்கட்டிய
கைகளும் கால்களும்
பனைக்கும் வீட்டுக்குமாய்
வழித்தடம் விலகாமலிருக்கக்
கண்காணித்த அதே கண்கள்
இன்று துப்பாக்கியின் கோட்டிடை வழியே.

காகமிருக்கப் பனம்பழம்
ஒருக்கால் விழுந்தால் தற்செயல்.
நெடுக விழுந்தால் சந்தேகங் கொள்.

குண்டு விழ
எல்லோரும் சிதறியோடும்
தெருவின் நடுவில்
வாய் பிளந்து கிடக்கும் பாழுங்கிணறு
கனவில் வரும்போது மட்டும் ஏன்
விடுதலையின் விமோசனத்தின்
வாசல் போல் தெரிகிறது ?????